# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TERM TEST - I ( 2017-2018 )

**CLASS : IX**

| | | |
|---|---|---|
| **Maximum Marks : 80** | **TAMIL** | **Time : 3 hours** |
| மதிப்பெண்கள் : 80 | | நேரம் : 3 மணி |

# தமிழ்

The question paper is diveded into four Sections.
இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | 15 | Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | 15 | மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | 14 | Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | 14 | மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | 15 | Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | 15 | மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | 36 | Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்கள் | 36 | மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 11 பக்கங்களைக் கொண்டது.

## பகுதி - அ.

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாகப் பெருஞ்செல்வம் படைத்தவராய் விளங்கினார். ஒருநாள் எல்லாவற்றையும் துறந்து விட்டுத் துறவியாகி விட்டார். அவரைக் காண, அரசன் தன் சுற்றம் சூழ ஆரவாரத்துடன் வந்தான். அங்கு அரையாடை மட்டும் அணிந்த நிலையில் துறவுக் கோலத்தில் அமர்ந்திருந்தார் பட்டினத்தடிகள். அவரை வணங்கிய அரசன் " எமக்கு இணையாகச் செல்வம் படைத்திருந்த நீங்கள் இன்று கண்ட பயன் என்ன ? " என்று கேட்டார். அதற்குப் பட்டினத்தடிகள், " நீர் நிற்க, நான் இருக்க, இந்தச் சிறப்பு ஒன்று போதாதா ? " என்று பதில் அளித்தார்.செல்வம் இருக்கும் போதும், இழந்த போதும் நாம் தன்னடக்கத்துடன் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**1. பட்டினத்தடிகள் அரசருக்கு இணையாக __________.**

அ ) அரையாடை அணிந்திருந்தார்

ஆ) பெருஞ்செல்வம் கொண்டிருந்தார்

இ ) வள்ளல் தன்மை உடையவர்

ஈ ) சுற்றம் சூழக் காணப்பட்டார்

**2. பெருஞ்செல்வம் இருக்கும் போதும், இழந்த போதும் நாம் __________.**

அ ) ஆரவாரத்துடன் இருத்தல் வேண்டும்

ஆ) தன்னடக்கத்துடன் இருத்தல் வேண்டும்

இ ) துறவியாக இருத்தல் வேண்டும்

ஈ ) ஆடம்பரமாக இருத்தல் வேண்டும்

**3. துறவி கண்ட பயன் __________.**

அ ) அரசன் இருக்க, பட்டினத்தார் நிற்க

ஆ) பட்டினத்தார் இருக்க, அரசன் நிற்க

இ ) அரசன் நிற்க, பட்டினத்தார் நிற்க

ஈ ) அரசன் இருக்க, பட்டினத்தார் இருக்க

**4. துறவுக் கோலத்தில் அமர்ந்திருந்தவர் __________.**

அ ) அரசன்

ஆ) பட்டினத்தார்

இ ) பெருஞ்செல்வந்தர்

ஈ ) பண்ணையார்

**5. சுற்றம் சூழ ஆரவாரத்துடன் வந்தவர் ________.**

அ ) துறவி

ஆ) செல்வந்தர்

இ ) துறவி

ஈ ) அரசன்

2) குற்றம் நடந்தால் உடனே காவலருக்குத் தெரிவிப்பதும், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவி செய்வதும் பொதுமக்களின் கடமையாகும். அமைதியைப் பாதுகாப்பதிலும், குற்ற ஆய்வு செய்வதிலும் காவலருக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.சமுதாய வளர்ச்சிக்கு அயராத உழைப்பு மட்டும் காரணமன்று. மக்கள் கடைப்பிடிக்கும் சட்ட ஒழுங்கும் காரணமாகும். "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" என்ற குறள் கூறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டத்தை

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

1. **காவலருக்குப் பொதுமக்கள் செய்ய வேண்டிய உதவி யாது ?**
   அ ) சட்டத்தைப் பாதுகாத்தல்
   ஆ) அயராத உழைப்பு
   இ ) சட்ட ஒழுங்கு
   ஈ ) அமைதியைப் பாதுகாத்தல்
2. **குற்றம் நடந்தால் யாருக்குத் தெரிவிக்க வேண்டும் ?**
   அ ) ஆசிரியர்
   ஆ) பெற்றோர்
   இ ) காவலர்
   ஈ ) முதல்வர்
3. **சமுதாய வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது எது ?**
   அ ) மக்கள் கடைப்பிடிக்கும் சட்ட ஒழுங்கு
   ஆ) குற்ற ஆய்வு செய்தல்
   இ ) காவலருக்குத் தெரிவித்தல்
   ஈ ) குற்றவாளியைக் கண்டுபிடித்தல்
4. **எத்தகைய வாழ்க்கை வாழ வேண்டும் ?**
   அ ) ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்
   ஆ) குற்றம் களைந்த வாழ்க்கை
   இ ) தகவல் அறியும் உரிமைச் சட்டம்
   ஈ ) உழைத்து வாழல்
5. **எது நம்மைக் காக்கும் ?**
   அ ) சமுதாய வளர்ச்சி
   ஆ) அமைதியைக் காத்தல்
   இ ) சட்டம்
   ஈ ) உழைப்பு

3) **கீழுள்ள உரைநடையைப் படித்து, அதன்திரண்ட கருத்தைச் சுருக்கி எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.** **1 x 5 = 5**

போக்குவரத்து வசதிகள் இக்காலத்தே எந்த அளவிற்கு முன்னேறியுள்ளன என்பதை அளவிட வேண்டுமானால்,பழங்காலப் போக்குவரவு முறையை நினைத்துப் பார்க்க வேண்டும்.காலொடிய நடந்தும், கழுத்தொடியச் சுமைகளைச் சுமந்தும் இடர்ப்பாடுகளோடு மேற்கொண்ட பயணங்கள் எல்லாம் இப்போது மாறி விட்டன. கடிதோடும் புகைவண்டியும், விரைந்தோடும் பேருந்தும், வானோடும் ஊர்தியும், கடலோடும் கப்பலும் பயண முறைகளை எளிமையும் வசதியும் மிக்கனவாகச் செய்து விட்டனவே ? இ:.து எதனால் ? அறிவியலின் ஆற்றல் அல்லவா? அறிவியல் வல்லுநர்களின் அயரா உழைப்பில் அல்லவா ?

## பகுதி - ஆ 1 x 6 = 6

4 ) கோடைச் சுற்றுலா பற்றி தோழன் / தோழிக்கு ஒரு கடிதம் வரைக.

( அல்லது )

உனது பகுதியில் மின்சார வசதி வேண்டி கடிதம் எழுதுக.

**எக்கடிதமாயினும் உமது முகவரி**

வசந்தன் / வசந்தி , 20 சக்தி காலனி, சென்னை -600 088.

**1 x 8 = 8**

5 ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை எழுதுக.**

1. முன்னுரை - சூழலின் தூய்மை - வீட்டில் தூய்மை - பொது இடங்களில் தூய்மை - தூய்மைக் கேடுகள் - விளைவுகள் - முடிவுரை

2. முன்னுரை - வான்மறை வள்ளுவர் - அறம், பொருள், இன்பம் - தனி மனிதன் - அற உரைகள் - உலகப்பொதுமறை - முடிவுரை.

3. முன்னுரை - மழைநீரின் அவசியம் - மழைநீர் சேமிப்பு - சேமிக்கும் முறை - பயன்கள் - முடிவுரை.

## பகுதி - இ

6 ) **சான்று தருக. ( மூன்று மட்டும் )** **3 x 1 = 3**

1. **எண்ணல் அளவை ஆகுபெயர்**

அ) ஒன்று பெற்றால் ஒளி மயம்
ஆ) பத்து கிலோ என்ன விலை ?
இ) ஐந்து லிட்டர் தேவை
ஈ ) மூன்று மீட்டர் கொடு

2. **வினைப் பகாப்பதம்**

அ) சால
ஆ) மரம்
இ) உறு
ஈ) காண்

3. நேரசை

அ) கால்

ஆ) படம்

இ) உலகு

ஈ) படும்

4. தேமா

அ) கண்ணா

ஆ) மலர்மிசை

இ) தாமரை

ஈ) கபிலர்

5. இடப்பெயர்ப் பகுபதம்

அ) கண்ணன்

ஆ) கரியன்

இ) மதுரையான்

ஈ ) நடிகன்

7 ) நிரப்புக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1. சொல் என்பதன் வேறு பெயர் __________.

அ) வினை

ஆ ) தொடர்

இ) கிளவி

ஈ) திணை

2. ஐகாரத்தின் இன எழுத்து ____________ .

அ) இகரம்

ஆ) உகரம்

இ) ஏகாரம்

ஈ ) ஓகாரம்

3. அந்தந்த எழுத்தே அதன் பக்கத்தில் வரும் அளபெடை ___________.

அ) செய்யுளிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை

ஈ ) ஒற்றளபெடை

4. பிரிக்க முடிந்த பதம் __________.

இ) பெயர்ப் பகாப்பதம்

ஆ) வினைப் பகாப்பதம்

இ) இடைப் பகாப்பதம்

ஈ ) பகுபதம்

5. இடைச்சொற்கள் ______ பதம் ஆகும்.

அ) பகு

அ) பகா

இ) விளி

ஈ) வினை பகு

8 ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1. பொன்னன் ( பதம் பிரித்து எழுதுக )

அ) பொன் + ன் + ஆன்

ஆ) பொன் + ன் + அன்

இ) பொன் + அன்

ஈ ) பொன் + ஆன்

2. இரண்டு கிலோ நெய் வேண்டும் ( ஆகு பெயர் ஆக்குக )

அ) நெய் வேண்டும்

ஆ) இரண்டு கிலோ நெய்

இ) நெய்

ஈ ) இரண்டு கிலோ வேண்டும்

3. நீள்புகழ் ( அசை பிரித்து எழுதுக )

அ) நேர் + நேர்

ஆ) நேர் + நிரை

இ) நிரை + நிரை

ஈ ) நிரை + நேர்

4. ஆற்றல் ( வாய்ப்பாடு கூறுக )

அ) தேமா

ஆ) புளிமா

இ ) கருவிளம்

5. **பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடு வாழ் வார்** ( பாடலில் இடம்பெற்ற பொருள்கோள் கூறு)

அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

ஆ) மொழிமாற்றுப் பொருள்கோள்

இ) நிரல்நிரைப் பொருள்கோள்

ஈ ) தாப்பிசைப் பொருள்கோள்

**9 ) இலக்கணக்குறிப்பு தருக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3**

1. **அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று**

அ) ஏகதேச உருவக அணி

ஆ) இல்பொருள் உவமையணி

இ) பிறிது மொழிதல் அணி

ஈ ) வேற்றுப் பொருள் வைப்பணி

2. **கெடுப்பதூஉம்**

அ) செய்யுளிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை

ஈ ) ஒற்றளபெடை

3. **மூன்று மீட்டர் கொடு**

அ) எண்ணல் அளவை ஆகுபெயர்

ஆ) எடுத்தல் அளவை ஆகபெயர்

இ) முகத்தல் அளவை ஆகபெயர்

ஈ ) நீட்டல் அளவை ஆகபெயர்

4. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

ஆ) மொழிமாற்றுப் பொருள்கோள்

இ) நிரல்நிரைப் பொருள்கோள்

ஈ ) தாப்பிசைப் பொருள்கோள்

5. வரனசைஇ இன்னும் உள்ளேன்

அ) செய்யுளிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை

ஈ ) ஒற்றளபெடை

10 ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (மூன்று மட்டும்)** **3 x 1 = 3**

1. அ) ஓரடியுள் உள்ள சொற்களை,அவைதரும் பொருளுக்கேற்ப மாற்றிக் கூறுதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

   ஆ ) ஓரடியுள் உள்ள சொற்களை,அவைதரும் பொருளுக்கேற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப் பொருள்கோள்

   இ ) ஓரடியுள் உள்ள சொற்களை,அவைதரும் பொருளுக்கேற்ப மாற்றிக் கூறுதல் நிரல்நிரைப் பொருள்கோள்

   ஈ ) ஓரடியுள் உள்ள சொற்களை,அவைதரும் பொருளுக்கேற்ப மாற்றிக் கூறுதல் தாப்பிசைப் பொருள்கோள்

2. அ) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பவை அளவைப் பெயர்கள் ஆகும்.

   ஆ) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பவை ஆகு பெயர்கள் ஆகும்.

   இ) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பவை விளி பெயர்கள் ஆகும்.

   ஈ ) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பவை வினை பெயர்கள் ஆகும்.

3. அ) உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் செய்யுளிசை அளபெடை வந்துள்ளது.

   ஆ)உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் இன்னிசை அளபெடை வந்துள்ளது.

   இ) உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் சொல்லிசை அளபெடை வந்துள்ளது.

   ஈ ) உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் ஒற்றளபெடை வந்துள்ளது.

4. அ) உதடுகள் இரண்டும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - ப், ம்

   ஆ) உதடுகள் இரண்டும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - ய், ர்

   இ) உதடுகள் இரண்டும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - க், ங்

   ஈ) உதடுகள் இரண்டும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் - **அ, ஆ**

5. அ) கழுத்தினின்று பிறப்பது வல்லினம்.

   ஆ) கழுத்தினின்று பிறப்பது மெல்லினம்.

## பகுதி - ஈ

11) **பின்வரும் பத்தியைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

இருபதாம் நூற்றாண்டில் அறிவியலும், இலக்கியமும் விரைவாக வளர்ந்தன. காலம் பல கண்ட தமிழ் மொழியும், புத்தம் புதிய இலக்கியவகைகளை ஏற்றுத் துறை தோறும் நன்கு வளர்ந்து தழைத்துச் செழித்தது.தமிழ் மொழியில் செய்யுள், உரைநடை என்னும் இரு வடிவிலும் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் உரைநடை வளத்தைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது இக்காலத்தை உரைநடைக் காலம் எனலாம்.எனினும் கவிதை வடிவமும் கவினுற வளர்ந்து வந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகனார், நாமக்கல் இராமலிங்கனார் எனக் கவிஞர் பலர் தோன்றி, நாடு, மொழி, இனம், சமுதாயம், கலை எனப் பலவற்றைப் பாடினர்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

1. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் நிலை யாது ?
2. தமிழ் மொழியில் புதுவகை இலக்கியங்கள் மலர்ந்த இரு வடிவங்கள் யாவை ?
3. உரைவளத்தைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது இருபதாம் நூற்றாண்டு எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
4. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய கவிஞர்களைக் குறிப்பிடுக.
5. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள் எவற்றைப் பற்றிப் பாடினர் ?

12) **பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து, தொடர்ந்து வரும் பாடலோடு தொடர்புடைய பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

கொம்பினை யொத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி யழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை யெனவுரை செய்வான்

**<u>வினாக்கள்</u>** **4 x 1 = 4**

1. இப்பாடல் இடம் பெற்ற நூலின் ஆசிரியர் யார் ?

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ) கம்பர்

ஈ ) வான்மீகி

2. கௌரவர் கோமான் யார் ?

அ) துரியோதனன்

ஆ) சகுனி

இ) திருதராட்டிரன்

ஈ ) விதுரன்

3. விருந்துக்காக அழைக்கப்பட்டவர்கள் யாவர் ?

அ) பாண்டவர்கள்

ஆ) பாஞ்சாலியோடு பாண்டவர்கள்

இ) குந்திதேவியோடு பாண்டவர்கள்

ஈ ) வாசுதேவ கிருஷ்ணனோடு பாண்டவர்கள்

4. பிடி - என்பதன் பொருள் யாது ?

அ) ஆண் யானை

ஆ) பெண் யானை

இ) ஆண் மயில்

ஈ ) பெண் மயில்

13) பின்வரும் திருக்குறள்களில் விடுபட்ட சொல்லை நிரப்பி எழுதுக. 4 x ½ = 2

1. அகழ்வாரைத் தாங்கும் _____________ தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2. நிறையுடைமை நீங்காமை வேண்டின் _____________
போற்றி ஒழுகப் படும்.

3. _____________ மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்

4. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
_____________ நோற்பாரின் பின்.

14) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. 2 x 5 = 10

1. திராவிட மொழிக்குடும்பம் பற்றி எழுதுக.

2. இக்கால மரபுக் கவிஞர்கள் இருவரின் கவித்திறத்தை விளக்குக.

3. கப்பலின் தோற்றத்தைப் புறநானூறு எவ்வாறு உவமிக்கிறது ?

4. பாரதிதாசனின் கவிதைப் போக்கினைப் பற்றி எழுதுக.

15) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. $2 \times 4 = 8$

1. இறைவரின் இயல்புகளாகக் கம்பர் கூறுவன யாவை ?
2. பிறர் செய்த தீங்கினை எங்ஙனம் பொறுத்தல் வேண்டும் ?
3. சிறுபஞ்சமூலம் வனப்புகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
4. இறைவனுக்கும், நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரிக்க.

16) பின்வரும் துணைப்பாட வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக. $1 \times 7 = 7$

1. கண்ணதாசனின் கவியின்பத்தை விவரி.
2. கெலன் கெல்லர் எவ்வாறு கல்வி கற்றார் ?
3. ரசீத்துக்கு மாங்கன்று எவ்வாறு கிடைத்தது ?